# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 63 | 4 Pages | 05.10.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 63 | 4 பக்கங்கள் | 05.10.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## சிக்கிம் மாநிலத்தை புரட்டி எடுத்த கனமழை.. மாயமான 23 ராணுவ வீரர்கள்! உதவிகளை வழங்குவதாக பிரதமர் உறுதி





கேங்டாக், அக். 5

வடக்கு சிக்கிமில் திடீரென ஏற்பட்ட மேக வெடிப்பு காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இது லாச்சென் பள்ளத்தாக்கில் உள்ள ராணுவ முகாமை கடுமையாக தாக்கியுள்ளது. இந்நிலையில், 23 ராணுவ வீரர்கள் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மாநிலத்திற்கு தேவையான உதவிகளை செய்வதாக பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான சிக்கிமில் நேற்று முதல் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக டீஸ்டா ஆற்றின் நீர்மட்டம்உயர்ந்துள்ளது.ஆற்றையொட்டியுள்ளகிராமங்களுக்குவெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் மக்கள் வீடுகளில் முடங்கியுள்ளனர். இது குறித்து முதலமைச்சர் பிரேம் சிங் தமாங் கூறுகையில்,

"இந்தவெள்ளத்தில்இதுவரையாருக்கும்எந்தபாதிப்பும்ஏற்படவில்லை. ஆனால் சிலரை காணவில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. அதேபோல பொதுச்சொத்துக்கள் பலத்த சேதத்தை எதிர்கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன" என்று கூறியுள்ளார்.

வெள்ளம் குறித்து மாநில பேரிடர் ஆணையம் கூறுகையில், "மாங்கன் மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் மேக வெடிப்பு காரணமாக வழக்கத்திற்கு மாறாக அதிக அளவில் மழை பெய்திருக்கிறது. இதுவே டீஸ்டா நதிப் படுகையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட காரணமாகும். எனவே இந்தநதியில்பயணம்செய்வதைதவிர்க்கவேண்டும். சுங்தாங்கில் உள்ள ஏரி உடைந்ததால் தற்போது நதியின் நீர் மட்டம் தொடர்ந்து வருகிறது. எனவே கரையோரம் இருக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வெண்டும்" என்று அறிவுறுத்தியுள்ளது.

நேற்று முதல், தெற்கு சிக்கிமில் உள்ள நம்ச்சி மற்றும் நாம்தாங் ஆகிய இடங்களில் முறையே 98.0மிமீ மற்றும் 90.5மிமீ மழை பெய்துள்ளது. மேலும் 34 நாட்களுக்கு இந்த பகுதியில் மிதமான மழை நீடிக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. அதேபோல இந்த திடீர் வெள்ளத்தில் சிக்கி 23 ராணுவ வீரர்கள் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. லாச்சென் பள்ளத்தாக்கில் உள்ள ராணுவ முகாமை வெள்ளம் தாக்கியதால் அங்கிருந்த ராணுவ வீரர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெள்ள பாதிப்புகள் குறித்து மாநில முதலமைச்சர் பிரேம் சிங் தமாங் உடன் பிரதமர் மோடி கலந்துரையாடியுள்ளார். அப்போது, வெள்ள பாதிப்பிலிருந்து மீள தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாகவும், அதேபோல பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளார்.

## ஒரே காலாண்டில் ரூ.10 ஆயிரம் கோடி லாபம் ரிலையன்ஸ் அம்பானியின் குழுமம் வெளியீடு



டெல்லி, அக். 5

ஒரே காலாண்டில் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல்லாபம் ஈட்டிய முதல் இந்திய நிறுவனம் என்ற பெருமையை ரிலையன்ஸ் நிறுவனம் பெற்றுள்ளது. இந்தியாவின் மிகப் பெரிய குழுமமான ரிலையன்ஸ் நிறுவனம், நடப்பு நிதியாண்டிற்கான 3வது காலாண்டு முடிவுகளை பிரபல ரிலையன்ஸ் குழுமம் வெளியிட்டுள்ளது. அதில் இடம்பெற்றுள்ள விவரங்கள் வருமாறு: நிறுவனத்தின் நிகர லாபம் ரூ. 10,251 கோடியாகவும், இதன் ஆண்டுக்காண்டு வளர்ச்சி விகிதமானது 8.82%ஆகஉயர்ந்திருக்கிறது.இந்தநிகரலாபமானதுமுந்தையகாலாண்டில் ரூ. 9,420 கோடி ரூபாயாக இருந்தது. அது தற்போது, நிறுவனத்தின் மொத்த வருவாய் 56.38% உயர்ந்து ரூ. 1,60,299 கோடியாக உச்சம் பெற்றிருக்கிறது. கடன் தொகை விவரங்கள் மேலும், கடந்தாண்டு மார்ச் மாதம்முடிவில்ரூ.2,18,763கோடியாகஇருந்தகொடுக்கப்படவேண்டிய கடன் தொகையானது கடந்த டிசம்பரில் ரூ. 2,74,381 கோடியாக உயர்ந்திருக்கிறது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. நிறுவனங்களின் வரலாற்றில் இது அசுர வளர்ச்சி என்று கூறப்படுகிறது.

நுகர்வோர்களுக்கு விற்பனை இந்த அசுர வளர்ச்சி குறித்து ரிலையன்ஸ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் முகேஷ் அம்பானி கூறியதாவது:இன்றைய தலைமுறை நுகர்வோர்களுக்கு ஏற்றார்போல் தங்களது பொருட்களின் விற்பனை நடந்து வருகிறது.

விரைவான முன்னேற்றம் சில்லரை மற்றும் ஜியோ தளங்களில் செயல்பட்டு வரும் வர்த்தகங்களில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. இதேபோல், நாளுக்கு நாள் நிறுவனம் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்து வருகிறது என்று அம்பானி பெருமிதத்துடன் கூறியுள்ளார். நுழைவு வாயில்களுக்கு திடீர் பூட்டு! சென்னையில் போராடும் ஆசிரியர்கள் இரவில் கைது? பரபர டிபிஐ வளாகம் 10 ஆயிரம் கோடி வருமானம் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான இந்தக் காலாண்டில் அந்நிறுவனத்தின் நிகர லாபம் 10 ஆயிரத்து 251 கோடி ரூபாய் உள்ளது. இதன்மூலம் ஒரே காலாண்டில் 10 கோடி ரூபாய்க்கு மேல் லாபம் ஈட்டிய முதல் இந்திய நிறுவனம் என்ற பெருமையை ரிலையன்ஸ் நிறுவனம் பெற்றுள்ளது. கணிசமாக உயர்ந்த லாபம் கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் அந்நிறுவன லாபம் 9 ஆயிரத்து 420 கோடி ரூபாயாக இருந்தது. தனது பெட்ரோ கெமிக்கல் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களின் லாபங்கள் கணிசமான அளவு உயர்ந்ததையடுத்து இந்த சாதனையை ரிலையன்ஸ் நிறுவனம் எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மயிலாடுதுறை பட்டாசு ஆலையில் வெடி விபத்து 4 பேர் உடல் சிதறி பலி: முதலமைச்சர் இரங்கல்

மயிலாடுதுறை, அக். 5

மயிலாடுதுறை மாவட்டம் தில்லையாடியில் வாணவெடி தயாரிக்கும் பட்டாசு ஆலை ஒன்று செயல்பட்டு வந்தது. இந்த ஆலையில் வழக்கம் போல் தொழிலாளர்கள் வாணவெடி தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளனர்.அப்போதுஎதிர்பாராத விதமாக வெடி விபத்து நிகழ்ந்துள்ளது. இந்த விபத்தில் வாணவெடி தயாரிப்பில் ஈடுபட்டிருந்த 4 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர்.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினரும் தீயணைப்புப் படை வீரர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் விபத்துக்கான காரணம் குறித்து வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வாணவெடி தயாரிக்கும் இடத்தில் நிகழ்ந்த வெடி விபத்தில் சிக்கி 4 தொழிலாளர்கள் பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.



மயிலாடுதுறை மாவட்டத்தில் பட்டாசு கடையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மயிலாடுதுறை மாவட்டம், பொறையார் காவல் சரகம், தில்லையாடி கிராமத்தில் செயல்பட்டு வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு கடையில் இன்று மதியம் வெடிகளை பார்சல் செய்யும்போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் கிடங்கல் கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கம், மயிலாடுதுறையைச் சேர்ந்த மதன், மகேஷ் மற்றும் ராகவன் ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன் .

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 4 நபர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பகுதி நேர ஆசிரியர்களுக்கு கூடுதலாக ரூ.2500 ஊதியம்; தொழிற்கல்வி ஆசிரியர்கள் விரைவில் பணி நிரந்தரம்; பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அறிவிப்பு

சென்னை, அக். 5

சென்னை கல்லூரிச் சாலையில் உள்ள டிபிஐ வளாகத்தில், கடந்த 10 நாட்களாக இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர் சங்கத்தினர் தொடர் உண்ணாவிரதம் இருந்து வந்தனர். அவர்களைதொடர்ந்து கடந்த 7 நாட்களாக தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களின் கூட்டமைப்பு, பகுதி நேர சிறப்பாசிரியர்கள் சங்கம் ஆகிய சங்கங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பட்டதாரி ஆசிரியர்கள் இரவு பகலாக தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இந்நிலையில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்அன்பில்மகேஷ் பொய்யாமொழி நேரடியாக இடைநிலை ஆசிரியர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் கோரிக்கை குறித்து கேட்டதுடன், முதல்வரிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். இருப்பினும், இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள்தங்கள்போராட்டத்தை தொடர்ந்தனர்.

அதன் தொடர்ச்சியாக, ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுடன், பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவொளி நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உடனடியாக பணி வழங்க வேண்டும். பணி நியமனத்துக்காக நடத்தப்படும் தேர்வை ரத்து செய்ய வேண்டும், தொகுப்பூதியத்திலாவது பணி நியமனம் செய்ய வேண்டும் என்றும் கேட்டனர். அவர்களின் கோரிக்கையில் உள்ள நடைமுறைகள், பணி நியமனம் வழங்குவதற்கான நெறிமுறைகள் குறித்து இயக்குநர் தெரிவித்தார். அவரின் பதிலில் திருப்தி அடையாதவர்கள் மீண்டும் பள்ளிக் கல்வி வளாகத்தில் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருப்பினும், முதல்வரின் பார்வைக்கு இந்த கோரிக்கை எடுத்து செல்லப்பட்டது. மேலும், அவர்களிடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்தார். இருப்பினும், மேற்கண்ட் சங்கங்களை சேர்ந்தவர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர். இதனால் டிபிஐ வளாகமே ஆசிரியர்களால் நிரம்பி வழிந்தது. இதையடுத்து அங்கு போலீசார் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதுடன், வெளியாட்கள் யாரும் அந்த வளாகத்துக்குள் நுழையாமல் பரிசோதித்து அனுப்பினர்.

மேலும், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அனைத்து சங்கங்களுடன் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி, கலைந்து செல்ல கேட்டுக் கொண்டனர். ஆனால், யாரும் அங்கிருந்து செல்லத் தயாராக இல்லை என்று தெரிவித்து அதே இடத்தில் போராட்டத்தை தொடர்ந்தனர். இதற்கிடையே, தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி, ஆசிரியர் சங்கங்களின் போராட்டம் மற்றும் கோரிக்கை குறித்து விவரமாக எடுத்துக் கூறியதுடன், அடுத்தகட்ட நடவடிக்கை குறித்தும் ஆலோசனை கேட்டார்.

அதன்தொடர்ச்சியாக நேற்று மாலை 6 மணி அளவில் தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி சந்தித்து கூறியதாவது: தமிழ்நாட்டு முதல்வருடன் நாங்கள் இரண்டு, மூன்று நாட்களாக ஆசிரியர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்து தெரிவித்தோம். அவர்களின் கோரிக்கைகளில் இப்போதைக்கு என்ன கோரிக்கையை நிறைவேற்ற முடியும் என்று கேட்டார். அதன்மீது ஆலோசனையும் வழங்கினார். அதனடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளை அறிவிக்க உள்ளேன்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்தில் ஆசிரியர் சங்கங்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்கள் கோரிக்கைகள் சார்ந்து அரசின் சார்பில் எடுக்கப்பட்ட முடிவின்படி, சமவேலைக்கு சமஊதியம் கேட்கும் கோரிக்கையின் அடிப்படையில், 6வது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, பல்வேறு துறைகளில் 1.6.2009க்கு பிறகு நியமிக்கப்பட்ட ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள ஊதிய முரண்பாடு இடைநிலை ஆசிரியர்களுக்கும் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கையை கவனமுடன் பரிசீலித்து அரசுக்கு பரிந்துரை அளிக்க 3 குழு அமைத்து அரசாணை 25 வெளியிடப்பட்டது.

அதில் அரசு நிதித்துறை செயலாளர், பள்ளிக்கல்வித்துறை செயலாளர், மற்றும் தொடக்க கல்வி இயக்குநர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவின் பரிந்துரைகள் 3 காலத்துக்குள் இறுதி செய்யப்பட்டு முதல்வர் அதன் மீது உரிய முடிவெடுக்க சமர்ப்பிக்கப்படும். இதை ஏற்று எண்ணும் எழுத்து திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு பயிற்சி நடப்பதாலும், வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிட்டு மேற்கண்ட பயிற்சியில் சேருமாறும், பயிற்சியை முடித்து பள்ளிக்கு திரும்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

பகுதிநேர ஆசிரியர்கள்: அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பல்வேறு சிறப்பு ஆசிரியர்கள் கடந்த 10 ஆண்டுகளாக தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் தற்போது பணியில் இருப்போர் 10,359 பேர். அவர்கள்அனைவரும் தொடக்கத்தில் ரூ.5 ஆயிரம் மாத ஊதியத்தில் நியமிக்கப்பட்டு தற்போது ரூ.10 ஆயிரம் ஊதியம் பெற்று வருகின்றனர். இவர்களின் முந்தைய கோரிக்கையான ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்துவது மற்றும் அவர்கள் விரும்பிய மாவட்டங்களுக்கு மாறுதல் வழங்குவது என்பதை அரசு ஏற்று அதை நடைமுறைப்படுத்தியுள்ளது. தற்போது நிதி நெருக்கடி இருந்தாலும், இந்த ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.2,500 ஊதியத்தை உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. அத்துடன் அவர்கள் கேட்காத கோரிக்கையான அவர்கள் அனைவருக்கும் ரூ. 10 லட்சம் வரை மருத்துவ காப்பீடு அறிமுகம் செய்யப்படும். அதற்கான காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்தும். எனவே இதையேற்று வேலை நிறுத்தத்தை கைவிட்டு பள்ளிகளுக்கு செல்ல வேண்டும்.

தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள்: தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று ஆசிரியர் பணிக்காக காத்துள்ளவர்களுக்கு உச்ச வயது வரம்பு பொதுப் பிரிவினருக்கு 53 என்றும், இதர பிரிவினருக்கு 58ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், பல்வேறு வழக்குகள் ஆசிரியர்கள் தெரிவு சார்ந்து உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு நிலுவையில் உள்ளது. தற்காலிக தொழில் கல்வி ஆசிரியர்களை நிரந்தரம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, 171 தற்காலிக தொழில் ஆசிரியர்களை முறையான ஊதிய விகிதத்துக்கு கொண்டு வரும் அரசாணை வெளியிடப்படும். பொது நூலகத்துறையில் நீண்ட நாட்களாக பணியாற்றும் ஊரக நூலகர்கள் தங்களை 3ம் நிலை நூலகர்களாக பதவி உயர்த்தக் கோரி வருகின்றனர்.

அதன்படி பொதுநூலகத்துறையில் 3ம்நிலை நூலகர்கள் பணியிடங்கள் 2058 உள்ளது. அதில் 446 காலியாக உள்ளன. ஊர்ப்புற நூலகர்கள் 1530 பேர் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் 446 பேர் 3ம் நிலை நூலகர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்படும். குறிப்பாக இன்று (நேற்று) 3 வித கோரிக்கை ஏற்று போராடும் ஆசிரியர்கள் தவிர போராட்டத்தில் ஈடுபடாமல் உள்ள ஆசிரியர்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். நிதி நெருக்கடி இருந்தாலும் மனதில் வைத்து ஆசிரியர்களின் உணர்வை மதிக்கும் வகையில் இந்த அறிவிப்பு வெளியிட முதல்வர் அறிவுறுத்தினார்.

பல்வேறு ஆசிரியர்கள் சங்கங்கள் என்னை சந்தித்து கோரிக்கை வைத்திருந்தாலும் அது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்று முதல்வர் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் அந்த பணியில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். அதனால் ஆசிரியர்கள் தங்களை வருத்திக் கொண்டு போராட்டத்தில் ஈடுபடாமல், இந்த அரசும் முதல்வர் செய்வார் என்ற நம்பிக்கையுடன் பள்ளிக்கு செல்லுங்கள். தகுதித் தேர்வு ரத்து என்ற கோரிக்கையும் உள்ளது. முதலில் என்னென்ன கோரிக்கை செய்ய முடியும் என்பதை பரிசீலித்து அறிவித்து வருகிறோம். தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி அவற்றை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆனால் இப்போது சிலர் போராட்டத்தில் ஈடுபடும் ஆசிரியர்களை சந்திக்கின்றனர். அவர்களிடம் இந்த ஆசிரியர்கள் சார்பில், கடந்த 10 ஆண்டுகளாக என்ன செய்தீர்கள் என்று ஒருவர்கூட கேட்கவில்லை. இருப்பினும் நிதி நெருக்கடி இருக்கும் இந்த நேரத்திலும் அவர்களின் உணர்வை மதிக்கும் வகையில் இந்த அரசு செய்து தர வேண்டும் என்ற கடமையிலும், செய்ய வேண்டும் என்று பேரவாவிலும் முதல்வர் இருக்கிறார் என்பதை ஆசிரியர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறோம். முதற்படியாகசிலவற்றைசெய்துள்ளோம். நமது அரசின் மீது நம்பிக்கை வையுங்கள். உங்கள் பணியை நீங்கள் செய்யுங்கள், உங்களுக்கான பணியை இந்த அரசு செய்யும். இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்தார்.

இந்த அறிவிப்புக்கு பிறகு பேராசிரியர் கல்வி வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஆசிரியர்கள் கருத்து தெரிவிக்கும் போது, இந்த போராட்டம் தொடரும் என்று அறிவித்துள்ளனர். இதையடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. போலீசார் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை பரிசீலித்து அரசுக்கு பரிந்துரை அளிக்க அமைத்துள்ள குழுவில் நிதித்துறை செயலாளர், பள்ளிக்கல்வித்துறை செயலாளர், மற்றும் தொடக்ககல்வி இயக்குநர் உள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஆசிரியர் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகள் தற்போது ஏற்கப்பட்டுள்ளது. அதில்,

★ பகுதி நேர ஆசிரியர்களின் மாத ஊதியத்தில் கூடுதலாக ரூ.2,500 வழங்கப்படும். ★ அவர்களுக்கு ரூ.10 லட்சத்துக்கான மருத்துவக் காப்பீடும் வழங்கப்படும். ★ தகுதித் தேர்வு எழுதும் ஆசிரியர்களுக்கான வயதுவரம்பு பொதுப்பிரிவினருக்கு 53, இதர பிரிவினருக்கு 58 ஆக வயது தளர்வு செய்யப்படும். ★ 171 தொழில் கல்வி ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்வதற்கான அரசாணை வெளியிடப்படும். ★ இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை களைய 3 பேர் கொண்ட குழு அமைக்கப்படும்.

# அதிக கொழுப்பு மற்றும் இதர சத்துள்ள பாலுக்கு கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க ஆவின் முடிவு



சென்னை, அக் 5

அதிககொழுப்பு மற்றும் இதர சத்துள்ள பாலுக்கு கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க ஆவின் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர்வெளியிட்டுள்ள அறிக்கையில், பால் உற்பத்தியாளர்களுக்கு பாலில் உள்ள கொழுப்பு மற்றும் இதரசத்துக்கள் அடிப்படையில் கொள்முதல் விலை அதிகபட்சமாக கொழுப்பு 5.9 சதவீதம் மற்றும் இதர சத்துக்கள் 9.0 சதவீதம் உள்ள பாலுக்கு 40.95 ரூபாய் வரைவழங்கப்பட்டு வந்ததாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அதிக கொழுப்புச்சத்துள்ள பாலுக்கு வழங்கப்பட்டு வந்த விலையை தரத்திற்கு ஏற்ப பிரித்து 6.0, 6.1, 6.2....... 7.5 என தரப்பட்டியலை உயர்த்தி உச்சபட்சமாக 7.5 வரை பால் கொள்முதல் விலைப்பட்டியல் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் கொழுப்புச்சத்து அதிகம் உள்ள பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு அதிக தொகை கிடைக்கும் என்றும் அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார். தரமான பால் உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட உள்ளது என்றும் அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும் நடப்பாண்டில் பால் உற்பத்தியாளர்களுக்கு நிகர இலாபத்தில் ஈவுத்தொகை வழங்கும் திட்டம் நடைமுறை படுத்தப்பட உள்ளது என்றும் அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார். மேலும் கால்நடைகளுக்கு காப்பீடு திட்டம், கால்நடைகளுக்கு மருத்துவ உதவி மற்றும் செயற்கை முறை கருவூட்டல் செய்தல் போன்ற சேவைகளும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் இதன் மூலம் பால் உற்பத்தி வரும் நாட்களில் கணிசமாக பெருகும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

# ‘அதிமுக, பாஜ கூட்டணி முறிவு காதலர்களின் தற்காலிக பிரிவு’



திருமயம், அக்.5

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அண்ணா அரசு மருத்துவமனையில் சிவகங்கை தொகுதி எம்.பி. கார்த்திக் சிதம்பரம் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் அளித்த பேட்டி: தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளது. இதற்கு காரணம் தமிழ்நாட்டில் புதிதாக மருத்துவ கல்லூரிகளை தொடங்க கூடாது, மருத்துவ படிப்பு இடங்களை அதிகரிக்க கூடாது என ஒன்றிய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவு விபரீதமான முடிவு. இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின், பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். தமிழ்நாட்டுக்கு இன்னும் அதிக மருத்துவர்கள் தேவை. அதிக மருத்துவர்களை உருவாக்க முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு முட்டுக்கட்டையாக ஒன்றிய அரசின் உத்தரவு உள்ளது. அதிமுக – பாஜக கூட்டணி பிரிவு என்பது நிரந்தர பிரிவா அல்லது காதலர்களுக்குள் இருக்கும் தற்காலிக பிரிவா என தெரியாது. அவர்கள் ஒன்றாக இருந்தாலும் சரி, தனியாக இருந்தாலும் சரி நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாட்டை பொறுத்தவரை திமுக – காங்கிரஸ் கூட்டணி 39 தொகுதிகளிலும் அமோக வெற்றி பெறும். இவ்வாறு அவர் கூறினார்.

# குழந்தை உட்பட 2 பேரை கடித்து குதறிய வெறிநாய்: பொதுமக்கள் அச்சம்



பேரணாம்பட்டு, அக். 5

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு அடுத்த எருக்கம்பட்டு கிராமத்தை சேர்ந்த கூலித்தொழிலாளி பார்த்திபன் மகன் அர்ஷன்(3) நேற்று காலை தெருவில் விளையாடிக்கொண்டிருந்தான். அப்போது அங்கு வந்த வெறிநாய் அர்ஷனை திடீரென கடித்து குதறியது. இதில் குழந்தையின் முகம் மற்றும் கை, காலில் பலத்த காயம் ஏற்பட்டது. குழந்தையை கடித்த நாய் ஒரு மணி நேரத்தில் அதே பகுதியில் நூலகத்தில் பணிபுரியும் குழந்தையின் உறவினரான சுப்பிரமணி(48)யையும் கடித்து குதறியது. இதில் அவருக்கு கை, கால் மற்றும் மார்பு உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. மேலும் அந்த வெறிநாய் அதேபகுதியில் உள்ள ஒரு பசு மாட்டையும் கடித்துள்ளது. அப்பகுதியில் தெரு நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளால் இதனை கட்டுப்படுத்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் பிரதம மந்திரியின் திருந்திய பயிர் காப்பீட்டு திட்டம்

மயிலாடுதுறை, அக்.5

மயிலாடுதுறை மாவட்டத்தில் மொத்தம் 282 கிராமங்களில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

அறிவிக்கை செய்யப்பட்டுள்ள அனைத்து வருவாய்கிராமங்களைசேர்ந்த அனைத்து விவசாயிகளும் திட்டத்தில்

சேர்ந்து பயன் பெறலாம். சம்பா/தாளடி நெற்பயிருக்கு பிரிமீயத்தொகை ஏக்கருக்கு ரூ.541.50/ செலுத்த வேண்டும். அறிவிக்கை செய்யப்பட்டுள்ள கிராமங்களை சார்ந்த கடன் பெறும் விவசாயிகள்

தாங்கள் பயிர்க்கடன் பெறும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக தங்கள் விருப்பத்தின் பேரில் பதிவு செய்து கொள்ளலாம். மற்ற விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள பொது சேவை மையத்தை அணுகி பதிவு செய்து கொள்ளலாம்.

விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யும்போது முன்மொழிவு விண்ணப்பத்துடன் பதிவு

விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் (பசலி 1433), வங்கிகணக்கு புத்தகத்தின்

முன் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து காப்பீடு செய்து கொள்ளலாம்.

காப்பீடு செய்யும்போது சாகுபடி செய்துள்ள கிராமத்தின் பெயர், புல எண், பரப்பு, வங்கி கணக்கு எண் ஆகியன சரியாக உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொண்டு அதற்கான ரசீதை பதிவு செய்த இடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பதிவு செய்த விவரங்களில் தவறு இருந்தால் காப்பீடு செய்யும் கடைசி தேதிக்குள் பதிவு செய்த இடத்திலேயே சரி செய்து கொள்ளலாம்.

சம்பா/ தாளடி நெற்பயிருக்கு காப்பீடு செய்ய நவம்பர் 15ஆம் தேதி கடைசி நாளாகும்.

கடைசி நேர கூட்ட நெரிசலை தவிர்க்கவும், விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும், முன்கூட்டியே பதிவு செய்து பயிர்களுக்கு ஏற்படும் எதிர்பாராத மகசூல் இழப்புகளில் இருந்து பாதுகாத்து பயனடையும் படியும், கூடுதல் விவரங்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட காப்பீட்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் தொலைபேசி எண். 9345738118 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி. மகாபாரதி தெரிவித்துள்ளார்.

# தாய்ப்பால் குடித்த சிசு மூச்சுத்திணறி பலி

திண்டுக்கல், அக். 5

திண்டுக்கல் அருகே மேட்டுப்பட்டி, எம்ஜிஆர் நகரைச் சேர்ந்தவர் திலீப் அந்தோணி ராஜ் (29). இவரது மனைவி மரியபெர்வின் பிரின்சியா (26).

இவர்களுக்கு 44 நாட்களுக்கு முன் இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன. இதில் ஒரு குழந்தை பிறந்த அன்றே உடல்நலக் குறைவால் உயிரிழந்தது.

பசியால் அழுத குழந்தைக்கு மரியபெர்வின் பிரின்சியா பாலூட்டினார். திடீரென குழந்தையின் மூக்கு வழியாக பால் வழிந்தது. அதிர்ச்சியடைந்த பெற்றோர்,

குழந்தையை தூக்கிக்கொண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

பால் குடித்தபோது, புரையேறி மூச்சுத்திணறி குழந்தை இறந்திருக்கலாம் என கூறப்படுகிறது

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066




திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் தலைமையில் பல்லடம் சாலையில் உள்ள கௌரி கிருஷ்ணா கூட்டரங்கில் மாநகராட்சி ஆணையாளர் பவங்குமார் கிரியப்பனவர் முன்னிலையில் தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டத்திற்கான சமூக கூட்டத்தை தொடங்கி வைத்தார்.

# தூத்துக்குடி மாவட்ட கிராம சபை கூட்டத்தில் 33 ஊராட்சிகளில் உள்ள 80 தெருக்களின் சாதிய பெயர்களை நீக்கி சமுதாய புரட்சி

தூத்துக்குடி, அக். 5

தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள், சாதி, மத மற்றும் சமூக பாகுபாடின்றி அரசின் திட்டங்கள், சலுகைகள் அனைவரையும் சென்றடையும் வகையில் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று பல நிகழ்ச்சிகளில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களில் அதன் தெருக்களின் பெயர்கள் சாதிய அடையாளங்களுடன் இருப்பதை தொடர்ந்து மேற்படி சாதிய அடையாளங்களை நீக்கி சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழ்ப்புலவர்கள், கவிஞர்கள், தமிழ் இலக்கிய ஆளுமைகள், விஞ்ஞானிகள், மிகச்சிறந்த அறிவியல் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தமிழின் தொன்மையையும், கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் வகையில் பெயர்கள் அமைக்குமாறு மாவட்ட ஆட்சி தலைவர் கடந்த ஆகஸ்ட் மாதம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கடந்த ஆகஸ்ட் 15ம் தேதி திருச்செந்தூர் வட்டம் மேல ஆத்தூர் கிராம பஞ்சாயத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் சாதி பெயரில் அமைந்த தெருக்களின் பெயர்களை மாற்றம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் தொடர் வேண்டுகோளை தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டத்தில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைகூட்டத்தில் 33 கிராம ஊராட்சிகளில் 80 தெருக்களின் சாதிய பெயர்களை நீக்கி பொதுவான பெயர்களை வைப்பதற்கான தீர்மானம் நிறைவே ற்றப்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட நிர்வாகத்தின் வேண்டுகோளை ஏற்று தெருக்களின் சாதிய பெயர்களை நீக்கி சமுதாய புரட்சி ஏற்படுத்திய ஊராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கி.செந்தில்ராஜ் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். இதனை மிகப்பெரிய சமுதாய மாற்றத்திற்கான தொடக்கப்புள்ளியாக கருதி ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இனிவரும்காலங்களில் அனைத்து சாதிய பெயர்களையும் நீக்க முழு அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

இந்த மாற்றத்தை நோக்கி நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பதாக இருக்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கி.செந்தில்ராஜ் தெரிவித்துள்ளார்.

ஊராட்சி ஒன்றியம் வாரியாக விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

# சுதந்திர போராட்ட வீரர் தியாகி திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா: மாவட்ட வருவாய் அலுவலர் மரியாதை



திருப்பூர், அக். 5

மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனர் ஆகியோர் முன்னிலையில், சுதந்திர போராட்ட வீரர் தியாகி திருப்பூர் குமரன் பிறந்த நாளை முன்னிட்டு, திருப்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் தெரிவித்தாவது,

திருப்பூர் குமரன் 4.10.1904ல் சென்னிமலையில் நாச்சிமுத்து முதலியார், கருப்பாயி தம்பதியினருக்கு முதல் பிள்ளையாக பிறந்தார். இவரது இயற்பெயர் குமாரசாமி ஆகும், குடும்ப சூழ்நிலை காரணமாக 5ம் வகுப்பிலேயே தனது பள்ளி படிப்பை முடித்துக்கொண்டார். வறுமையின் காரணமாக மேற்கொண்டு பள்ளிப் படிப்பை தொடர முடியாத காரணத்தால் தனது குடும்பத் தொழிலான கைத்தறி நெசவு செய்து வந்தார். இவர் தனது 19 வது வயதில் இராமாயி என்ற பெண்ணை 1923 ஆம் ஆண்டு மணந்தார்.

கைத்தறித் தொழிலில் போதுமான வருமானம் இல்லாததால் ஈரோடு சென்று பஞ்சு மில் ஒன்றில் எடைபோடும் குமாஸ்தாவாக பணிபுரிந்து வந்தார். ஆரம்பம் முதலே காந்தியடிகளின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட குமரன், நாட்டு விடுதலைக்காக காந்தியடிகள் அறிவித்த போராட்டங்களில் எல்லாம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 04.01.1932ல் காந்தியடிகளை ஆங்கிலேயஅரசுகைதுசெய்தது. இச்செய்தி காட்டு தீ போல் நாடெங்கும் பரவியது காங்கிரஸ் தொண்டர்கள் கொதித்தெளுந்தனர். இதனால் கண்டன போராட்டம் நடத்தவும், சட்டமறுப்பு இயக்கம் நடத்தவும் முடிவு செய்தனர்.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில்திருப்பூரில் போலீசாரின் தடையை மீறி 10.01.1932ஆம் ஆண்டு தியாகி பி.எஸ். சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கண்டன ஊர்வலத்தில் முதல் வரிசையில் காங்கிரஸ் கொடியை பிடித்து கொண்டு குமரன்வந்தார். வெள்ளைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து கோஷம் எழுப்பிய போது போலீசாரின்காட்டுமிராண்டித்தனமான தாக்குதலால் உடலிலும், தலையிலும் பலத்த காயமேற்பட்டு தன் கையிலிருந்த கொடியை தரையில் சாய விடாமல் வந்தே மாதரம் என்ற முழக்கத்தை எழுப்பி தன் நாட்டு பற்றினை பறைசாற்றினார்.

குமரன் கீழே விழுந்தாலும் அவர் கையில் ஏந்தியிருந்த கொடி தரையில் விழாமல் பிடித்திருந்தார். திருப்பூர் வீதியிலே கொடிகாக்க குருதி வெள்ளத்தில் குமரன் வீழ்ந்து கிடந்தார். அடிபட்டு பலத்த காயங்களுடன் இருந்த குமரன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த போது சுயராஜ்யம் வராதா என இறுதிச் சொற்களுடன் 11.01.1932ஆம் ஆண்டு இம்மண்ணுலகை விட்டு சென்றார். இதனால் இவர் கொடி காத்த குமரன் எனப் பெயர் பெற்றார்.

விண்ணில் பறக்கும் கொடி மண்ணில் வீழ்வதா என தன்னுயிர் கொடுத்து நாட்டின் மானம் காத்த பெருமை இந்திய விடுதலை வரலாற்றில் தனிப்பெருமை வாய்ந்தது. திருப்பூர் குமரன் நினைவாக அவரது திருவுருவத்துடன் கூடிய அஞ்சல் வில்லையை 2007ஆம் ஆண்டு மத்திய அரசு வெளியிட்டு சிறப்பித்தது. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர் இரயில் நிலையம் எதிரில் மொத்தம் 11,195 சதுர அடி பரப்பளவில், அமைந்துள்ளது. நினைவு மண்டபம் கட்டிடம் 2500 சதுரடியில் ரூ.4,80,353 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. அன்னாரது திருவுருச்சிலைக்கு பிறந்தநாளான இன்றைய தினம், மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட வருவாய் அலுவலர் திரு.த.ப.ஜெய்பீம் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, திருப்பூர் குமரன் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்கள்.

இவ்விழாவில், திருப்பூர்சார் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன் துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியன், திருப்பூர் மாநகராட்சி மண்டலத்தலைவர்கள் இல.பத்மநாபன், கோவிந்தராஜ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதீஸ்குமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்(செய்தி) ஒ.ர.மனோஜ் குமார், திருப்பூர் குமரன் அவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நாகை - இலங்கைக்கு செல்லும் பயணிகள் கப்பல் இன்று நாகை துறைமுகம் வருகை: நாளை சோதனை ஓட்டம்



நாகப்பட்டினம், அக்.5

நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கைக்கு செல்வதற்கான பயணிகள் கப்பல் கொச்சி துறைமுகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு புறப்பட்டது. இன்று நாகை வந்தடையும். நாளை சோதனை ஓட்டம் நடைபெறுகிறது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்க உள்ளது. இதற்காக கடந்தமாதம் அமைச்சர் எ.வ.வேலு, நாகை துறைமுகத்தை ஆழப்படுத்தி தூர்வாரும் பணியை தொடங்கி வைத்தார்.

அப்போது அவர், அக்டோபர் முதல் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும் என தெரிவித்தார். நாகப்பட்டினம் துறைமுகத்தை நவீனப்படுத்த ஒன்றிய அரசு வழங்கிய ரூ.3 கோடி நிதி கொண்டு நாகப்பட்டினம்துறைமுகத்தை ஆழப்படுத்தி, நவீனப்படுத்தும் முயற்சியில் தமிழ்நாடு அரசு இறங்கியது.

இதை தொடர்ந்து நாகப்பட்டினம் துறைமுகத்தில் குடியுரிமை பெறுவது, மருத்துவ பரிசோதனை செய்வது, பயணிகள் கொண்டு வரும் உடமைகளை பாதுகாப்பாக வைப்பது மற்றும் ஆய்வு செய்வது என அனைத்திற்கும் தனித்தனியாக அறைகள் கட்டப்பட்டது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் பணியாற்றுவதற்காக பாஸ்போர்ட் சோதனை செய்வது, பயணிகளின் உடமைகளை ஆய்வு செய்வது என பல்வேறு பணிகளில் பணியாற்றும் அதிகாரிகள் டெல்லி சென்று பயிற்சி பெற்றனர்.

பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கியதும் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து 2 கப்பல்கள் இலங்கைக்கு சென்று வரும்.

இதில் ஒரு கப்பல், நாகப்பட்டினத்தில் இருந்துகாலை10மணிக்கு இலங்கை காங்கேசன் துறைமுகம் நோக்கி செல்லும். எதிர் திசையில் இலங்கையில் இருந்து மாலை 5 மணிக்கு நாகப்பட்டினம் துறைமுகம் நோக்கிகப்பல்புறப்படும்.

நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை சென்றுவர 6 ஆயிரம் லிட்டர் டீசல் தேவைப்படுவதால் பயணிகளுக்கான கட்டணம் ரூ.4 ஆயிரம் முதல் ரூ.4,500 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கப்பல் போக்குவரத்து முழுவதும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால் பாஸ்போர்ட் அவசியம். நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து 60நாட்டிக்கல் மைல் தூரத்தில் இலங்கை காங்கேசன் துறைமுகம் அமைந்துள்ளதால் 2.30 மணி நேரத்தில் கப்பல் மூலம் இலங்கை சென்றடைய முடியும்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், 'கடல் சீற்றம் குறைந்ததால் கேரளா மாநிலம் கொச்சி துறைமுகத்தில் இருந்து நாகப்பட்டினம் துறைமுகத்துக்கு ஒரு கப்பல் நேற்று (நேற்று முன்தினம்) இரவு புறப்பட்டுள்ளது.

400 நாட்டிக்கல் மைல் தூரத்தில் உள்ள நாகப்பட்டினம் துறைமுகத்துக்கு இந்த கப்பல் நாளை (இன்று 5ம்தேதி) காலை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு வந்ததும் சோதனை அடிப்படையில் 6ம் தேதி (நாளை) நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து சோதனை முறையில் தொடங்கப்படும். அனைத்து கட்டுமான பணிகளும் நிறைவு பெற்று, ஜனவரி மாதம் முதல் முழுமையாக பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும்' என்றனர்.

## ரூ.1000 மகளிர் உரிமைத் தொகை.. முதலமைச்சர் கணக்குக்கே திரும்பி போன விசித்திரம் நடந்தது என்ன?

தென்காசி, அக். 5

பெண்களின் வங்கிக் கணக்கில்விழுந்தரூ.1000 மகளிர் உரிமைத் தொகை மீண்டும் முதலமைச்சரின் கணக்கிற்கு சென்றது என்றால் நம்ப முடிகிறதா? எப்படி என்று விரிவாக பார்ப்போம். கடந்த செப்டம்பர் 15 ஆம் தேதி அண்ணா பிறந்தநாள் அன்று தமிழ்நாடு அரசின் ரூ.1000 கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடங்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் தமிழ்நாடு அரசு இதனை பெற தகுதி உள்ள பெண்கள் யார், தகுதி இல்லாதவர்கள் யார் என்ற பட்டியலை அறிவித்தது. அதன்படி கடந்த ஜூலை மாதம் இதற்கான முகாம் தொடங்கப்பட்டது. அதில் மக்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு ஆகஸ்டு 4 ஆம் தேதி முதல் கட்ட முகாம் நிறைவு பெற்றது. அதன் மூலம் 80 லட்சத்துக்கும் அதிகமான விண்ண ப்பங்கள் பெறப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன.

2 ஆம் கட்ட முகாம் ஆகஸ்டு 5 ஆம் தேதி தொடங்கப்பட்டுஆகஸ்டு 18 ஆம் தேதி வரை நடைபெற்றது. 2 ஆம் கட்ட முகாமில் விண்ணப்பிக்காதவர்களுக்கு வாய்ப்பு வழங்கும் வகையில் ஆகஸ்டு 18 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை சிறப்பு முகாமை தமிழ்நாடு அரசு நடத்தியது. அதன் மூலமாக 1.63 கோடி விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் அரசிடம் உள்ள பல்வேறு தகவல் தரவு தளங்களில்உள்ளதகவல்களுடன் ஒப்பிட்டும் அரசு அலுவலர்களால் நேரடி கள ஆய்வுகளின் மூலம் சரிபார்க்கப்பட்டும் திட்ட விதிமுறைகளைப் பூர்த்தி செய்த 1.065 கோடி மகளிர் பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும், தகுதியின்மைக்கு உள்ளான விண்ணப்பங்கள் ஏற்கப்படவில்லை. விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப முடிவு நிலை குறித்த குறுஞ்செய்தி விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு 18.09.2023 முதல் அனுப்பி வைக்கப்பட்டது. ஏற்கப்படாத விண்ணப்பதாரர்கள் குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிவிப்பு, "குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இசேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம்.

மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் 30 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படும். வருவாய் கோட்டாட்சியர் மேல்முறையீட்டு அலுவலராகச் செயல்படுவார். இணையதளம் மூலம் செய்யப்படும் மேல்முறையீடுகள்,

அரசு தகவல் தரவு தளங்களில் உள்ள தகவல்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்டு வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்படும்.

வருவாய் கோட்டாட்சியர் மேல்முறையீட்டு விண்ணப்ப ங்களைத் தீர்வு செய்ய கள ஆய்வு தேவைப்படும் நேர்வுகளில், சம்பந்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள் வழி கள ஆய்வு அறிக்கையினைப் பெற்று விசாரணை செய்வார். இந்த மேல்முறையீடு நடைமுறைகள் அனைத்தும் இணையதளம் வழியாக மட்டுமே செய்யப்படும். வருவாய் கோட்டாட்சியர் பயனாளிகளின் தகுதி மற்றும் தகுதியின்மைகள் தொடர்பாக தனி நபர்களின் மூலம் வரப்பெறும் புகார்கள் குறித்த விசாரணை அலுவலராகச் செயல்படுவார். இணையதளம் வழியாகப் பெறப்படும் புகார்கள் மேல் முறையீட்டு மனுக்களுக்கு பின்பற்றப்படும் நடைமுறைகளைப் பின்பற்றி விசாரிக்கப்படும்." என்று குறிப்பிடப்பட்டது. ஒரு பக்கம் தங்களுக்கு பணம் கிடைக்கவில்லை என பெண்கள் இ சேவை மையங்களுக்கு அலைந்து கொண்டு இருக்க, தங்களுக்கு கிடைத்த பணத்தை முதலமைச்சரின் நிவாரண நிதிக்கே 30 பெண்கள் செலுத்தி உள்ளனர். தென்காசியில் மகளிர் உரிமைத் தொகை கிடைக்காத பொதுமக்கள், அங்கு வந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் மனு அளித்து உள்ளனர். இந்த மனு பெறப்பட்ட 24 மணி நேரத்தில் பணம் கிடைத்து உள்ளது. இதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக 30 பெண்கள் ரூ.15 ஆயிரத்தை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு அனுப்பி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## விழுப்புரத்தில் அறிஞர் அண்ணா நெருந்தூர ஓட்டப் போட்டி : மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தகவல்

விழுப்புரம், அக். 5

2023–2024 ஆண்டிற்காண விளையாட்டு துறை சார்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறைஅமைச்சர் அவர்கள் அன்று அன்றாட வாழ்வில் உடற்தகுதியை பேணுவது குறித்த விழிப்புணர்வை பெதுமக்களிடையே ஏற்படுத்துவதற்கும், உடற்தகுதி கலாச்சாரத்தை இளைஞர்களிடையே புகுத்துவதற்கும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாரத்தான் போட்டிக்கு இணையான அறிஞர் அண்ணா நெருந்தூர ஓட்டப் போட்டி ஆண்டுதொறும் நடத்தப்படும் என 11.04.2023 அன்று அறிவித்தார்கள். அதன்படி விழுப்புரம் மாவட்டத்தில்07.10.2023அன்று மாவட்ட ஆட்சியரக பொருந்திட்ட வளாகத்தில் அறிஞர் அண்ணா நெருந்தூரஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் 2 பிரிவுகளாக ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனியாக நடத்தப்பட உள்ளது. முதல் பிரிவில் 17 வயது முதல் 25 வயதுவரை உள்ள ( 01.01.1998 முதல் 01.01.2007 வரை ) பள்ளி,

கல்லூரி அரசு பணியாளர்கள் மற்றும் பொதுப்பிரிவினர்களுக்கும், 25 வயதிற்கு மேல் (31.12.1997 முன்னர்) உள்ள அனைத்து அரசு அலுவலர்கள், பொதுபிரிவினர்கள், விளையாட்டு

ஆர்வலர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலரும் கலந்து கொள்ளலாம். மேலும்

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்/வீராங்கனைகள், ஆண்கள், பெண்கள் தங்களுடைய ஆதார் அட்டை

நகல் கண்டிப்பாக கொண்டு வந்து பதிவு மேற்க்கொள்ள வேண்டும். இப்போட்டியில் பங்கேற்பவர்கள் தங்கள் பதிவினை எம்.ஜி.ஆர் உள்விளையாட்டரங்கம், மாவட்ட ஆட்சியரக பொருநத்திட்ட வளாகத்தில் இன்று முதல் நேரடியாக பதிவு மேற்க் கொண்டு கலந்துகொள்ளலாம். பதிவு மேற்க் கொள்ள கடைசி தேதி 07.10.2023 காலை 6.30 மணி ஆகும். இப்போட்டிகள் காலை 7.00 மணியளவில் எம்.ஜி.ஆர் உள்விளையாட்டரங்கம், மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தில் இருந்து துவக்கப்ப டும்.

கலந்துகொள்பவர்கள் 45 நிமிடத்திற்கு முன்னதாக போட்டி நடைபெறும் இடத்தில் தங்களது பதிவினை உறுதி செய்து தங்களுடைய மார்பு எண்ணை பெற்றுக் கொண்டு கலந்து கொள்ள வேண்டும். போட்டியில் வெற்றிபெறும் முதல் மூன்று இடங்களுக்கு ரூ.5000, 3000, 2000, எனவும் ரூ.1000 வீதம் பத்து பரிசு வரை ஒவ்வொரு பிரிவிற்கும் சான்றிதழ்களுடன் வழங்கப்படும்.

எனவே மேற்கண்ட போட்டிகளில்விழுப்புரம் மாவட்டத்தில் பயிலும் பள்ளி, கல்லூரி மாணவ /மாணவியர்கள், அரசு அலுவலர்கள், பொதுபிரிவினர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் பெருமளவில் கலந்துகொண்டு பயன்பெறவும் மற்றும் இது தொடர்பாக இதர விபரங்களை மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நேரிலோ, அல்லது தொலைபேசியிலோ 9566883394, 8675773551, 7401703485 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு விபரம் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பழனி தெரிவித்துள்ளார்கள்.

## பரந்தூர் விமான நிலையத்திற்கு எதிர்ப்பு: கிராம மக்கள் மீது பதியப்பட்ட வழக்கை வாபஸ் பெறுக—வேல்முருகன்




சென்னை, அக். 5

பரந்தூர் விமான நிலையத்திற்கு எதிராக போராட்டம் நடத்திய கிராம மக்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ளஅறிக்கைவருமாறு;

"காஞ்சிபுரம் மாவட்டம், பரந்தூர், ஏகனாபுரம் உள்ளிட்ட 13 கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளில் சென்னையின் இரண்டாவது பசுமை விமான நிலையம் அமைக்க ஒன்றிய மாநில அரசுகள் திட்டமிட்டு, அதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், பரந்தூர் புதிய விமான நிலையம் அமையும் பட்சத்தில் முழுவதும் கையகப்படுத்தப்பட உள்ள ஏகனாபுரம் கிராம மக்கள் புதிய விமான நிலையத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 433 நாட்களாக இரவு நேரங்களிலும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இச்சூழலில் புதிய விமான நிலையத் திட்டத்தில், நீர் நிலைகள் பாதிக்கப்படுவது குறித்து ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி மச்சேந்திர நாதன் தலைமையில் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு இரண்டாவது முறையாக பரந்தூர் விமானநிலையம்அமைய உள்ள பகுதிகளில் ஆய்வு செய்ய வந்தனர். இவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏகனாபுரம் பகுதி பொதுமக்கள் மற்றும் விமான நிலைய எதிர்ப்புக் கூட்டமைப்பு குழுவினர், பரந்தூர் கண்ணந்தங்கள் சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட கிராம மக்கள் 130 மீது பேர் காவல்துறை வழக்குப்பதிவு செய்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது; கண்டனத்துக்குரியது.

அரசுகள் நிறைவேற்ற முற்படும் திட்டங்கள் அனைத்தும் மக்களின் பெயராலேயே நிறைவேற்றப்படுகின்றன, அத்திட்டத்தை நிராகரிக்கவும், அதை எதிர்த்துப் போராடவும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் மக்களுக்கு உரிமையை வழங்கியுள்ளது. ஆனால், பரந்தூர் விவகாரத்தில் அந்த உரிமைகளை தமிழ்நாடு அரசு மறுத்து வருவது வேதனை அளிக்கிறது.

பரந்தூர் விமான நிலையத்திற்காக கையகப்படுத்தப்படவுள்ள மொத்தமுள்ள 4,563.56 ஏக்கரில் சுமார் 3,246 ஏக்கர் நிலம் விவசாயம் நடைபெறும் நன்செய் மற்றும் புன்செய் 799.59 நிலங்களாகும். நெல் விவசாயம் நடைபெறும் இந்நிலத்தை கையகப் படுத்துவதன் மூலம் நம்முடைய உணவு பாதுகாப்பு கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது.

சூழலைக் காப்பது, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது, நீர்நிலைகளை பாதுகாப்பதுதான் இன்றைய நிலையில் தலையாய கடமை என்பதை காலநிலை மாற்றம், அவ்வப்போது நமக்கு படிப்பினையை கற்றுக் கொடுத்து வருகிறது.

இந்தஎதார்த்தநிலையை புரிந்துக்கொண்டு, அரசு பரந்தூரில் அமைக்கத் திட்டமிட்டுள்ள உள்ள, விமான நிலையத் திட்டத்தை கைவிட்டுவிட்டு மாற்றுவழிகளை முன்னெடுக்கவேண்டும்.

அதற்கு மாறாக, பல்லாண்டுகளாக வியர்வை சிந்தி நிலத்தைப் பண்படுத்தி விளைநிலமாக மாற்றி வைத்திருக்கும் கிராம மக்கள் மீது வழக்குப்பதிவு செய்து, அச்சுறுத்தி அடிபணிய வைக்க அரசு முயலுவது ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, பரந்தூர்விமான நிலையத்திற்கு எதிராக போராடிய கிராம மக்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை தமிழ்நாடு அரசு திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது."

## சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி குமரேஷ் பாபுவின் மகள் தூக்கிட்டு தற்கொலை..காரணம் என்ன? போலீஸ் விசாரணை

சென்னை, அக். 5

சென்னைஉயர்நீதிமன்ற நீதிபதியான குமரேஷ் பாபுவின்மகள்கிராஇன்று வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருப்பவர்குமரேஷ் பாபு. இவர் அதிமுக பொதுக்குழு வழக்கு, அதிமுகவின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மீதான நில அபகரிப்பு வழக்கு உள்பட பல முக்கிய வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கி உள்ளார்.

நீதிபதி குமரேஷ் பாபு சென்னை அபிராமபுரத்தில் வசித்து வருகிறார். இவரது மகள் பெயர் கிரா. இவர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இந்நிலையில் தான் இன்று மாலையில் கிரா திடீரென்று தனது வீட்டுஅறையில்தூக்கிட்டு கொண்டார்.

இதையடுத்து அவரது குடும்பத்தினர் வீட்டு கதவை உடைத்து அவரை மீட்டு அருகே உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவரை டாக்டர்கள் பரிசோதித்த நிலையில் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். அதன் பிறகு அவரது உடல் பிரதே பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் சம்பவம் குறித்து அறிந்தவுடன் அபிராமபுரம் போலீசார் விசாரணையை தொடங்கி உள்ளனர். நீதிபதி குமரேஷ் பாபுவின் வீட்டில் தடயவியல் நிபுணர்கள் ஆய்வு செய்தனர். தற்போதைய சூழலில் அவர் எதற்காக தற்கொலை செய்தார்? என்பது தெரியவில்லை. இதுதொடர்பாக அபிராமபுரம் போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரிகின்றனர்.

## பூணூல் அணிந்த 100 தலித்கள்.. ஆளுநர் ஆர்என் ரவி பங்கேற்பு: நந்தனார் குருபூஜை விழாவில் என்ன நடந்தது?




கடலூர், அக். 5

கடலூர் மாவட்டம் சிதம்பரம் காட்டுமன்னார் கோவில் அருகே இன்று நந்தனார் குருபூஜை விழா நடந்தது. இந்த விழாவில் ஆளுநர் ஆர்என் ரவி பங்கேற்ற நிலையில் 100 தலித்கள்பூணூல் அணிந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் காட்டுமன்னார் கோவில் அருகே ஆதனூர் கிராமம் உள்ளது. இங்கு தான் நந்தனார் பிறந்தார். இந்த நிலையில் ஆதனூரில் நந்தனார் குருபூஜை விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இந்த விழாவுக்கு தமிழக ஆளுநர் ஆர்என் ரவிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதையடுத்து இன்று நடந்த விழாவில் ஆளுநர் ஆர்என் ரவி பங்கேற்றார்.

இந்த விழாவில் 100 ஆதிதிராவிடர்களுக்கு பூணூல் அணிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. இதையடுத்து ஆளுநர் ஆர்என் ரவி முன்னிலையில் 100 ஆதிதிராவிடர்கள்பூணூல்அணிந்து கொண்டனர். மேளதாளங்கள், மந்திரங்கள் முழங்க ஆதிதிராவிடர்கள் பூணூல் அணிந்து கொண்டனர்.

இந்த விழாவில் ஆளுநர் ஆர்என் ரவியுடன் ஸோகோ நிறுவனத்தின் சிஇஓ ஸ்ரீதர் வேம்பு உள்பட பலர் பங்கேற்றனர்.

முன்னதாக இந்த விழாவில் ஆளுநர் ஆர்என் ரவி பங்கேற்க வருவதால் அங்கு பரபரப்பான சூழல் ஏற்பட்டது. அதாவது விழாவுக்காக ஆளுநர் ஆர் என் ரவி நேற்று இரவு கடலூர் சென்று விருந்தினர் மாளிகையில் தங்கினார்.

அவர் நிகழ்ச்சிக்கு புறப்பட்டார். அப்போது ஆளுநர் ஆர்என் ரவி சனாதனத்தை தூக்கி பிடிக்கிறார். அவர் திரும்பி போக வேண்டும். நந்தனார் குருபூஜையில் ஒரு பிரிவினை வாதத்தை கொண்டு வருவதற்காகபூணூல்அணியும் விழாவில் கலந்து கொள்ள வந்திருக்கிறார். அவருக்கு கருப்பு கொடி காட்ட இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த தொண்டர்கள் முயன்றனர்.

இதையடுத்து அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர். முன்னதாக ஆளுநர் ஆர் என் ரவி வருகையையொட்டி கடலூர் மாவட்ட எஸ்பி ராஜாராம் தலைமையில் 700க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த குருபூஜை விழாவை முடித்த ஆளுநர் ஆர்என் ருவி அதன் பிறகு அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கும் சென்று பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றார்.

## கோவையில் உயிரை பறித்த வேகத்தடை.. பொதுமக்கள், பள்ளி நிர்வாகங்களுக்கு மாநகராட்சி எச்சரிக்கை

கோவை, அக்.5

கோவை கொடிசியா அருகில் புதிதாக அமைக்கப்பட்ட வேகத்தடையை அறியாமல் பைக்கில் வந்த இளைஞர் உயிரிழந்த நிலையில், பொதுமக்கள், தன்னார்வலர்கள், வணிக நிறுவனத்தினர், பள்ளி மற்றும்கல்லூரிநிர்வாகத்தினர் தன்னிச்சையாக வேகத்தடை அமைக்க கூடாது என்று கோவை மாநகராட்சி எச்சரித்துள்ளது. பொதுவாக வேகத்தடைகள் என்பது அந்த பகுதிகளில் விபத்து ஏற்படக்கூடாது, யாராவது வாகனத்தில் அடிப்பட்டு இறந்துவிடக்கூடாது என்ற நோக்கில் அமைக்கப்படுகிறது. ஆனால் என்ன ஒரு சிக்கல் என்றால், அந்த வேகத்தடைகள் வாகன ஓட்டிகளுக்கு ஆபத்தாகவே சில நேரங்களில் முடிகிறது. இதே போல் போக்குவரத்து போலீசார், வாகன ஓட்டிகளின் வேகத்தை குறைக்க தடுப்புகள் வைப்பார்கள். அப்படி வைக்கப்படும் தடுப்புகளால் பலரும் விபத்தில் சிக்கி உயிரிழப்பது உண்டு. பொதுவாக தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்து க்ளுக்கு தடுப்புகளும் ஒரு காரணமாக இருக்கிறது. வேகத்தடை இன்னொரு காரணமாக இருக்கிறது. பகலில் வாகன நெருக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் அந்த தடுப்புகள் அல்லது வேகத்தடைகளால் நல்லது நடந்தாலும், நள்ளிரவில் வருவோருக்கு அது சில நேரங்களில் எமனாகவே இருக்கிறது. அப்படித்தான் கோவையில் திடீரென அமைக்கப்பட்ட வேகத்தடை ஒரு உயிரையே பறித்தது. கோவை சூலூர் பகுதியை சேர்ந்த 26 வயது இளைஞர் சந்திரகாந்த், சேரன் மாநகரில் டிபார்ட்மென்டல் ஸ்டோர் வைத்து நடத்தி வந்திருக்கிறார்.

செப்டம்பர் 29ம்தேதி அன்று நள்ளிரவு 12 மணியளவில் கடையை மூடிவிட்டு, சந்திரகாந்த் இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு போய் கொண்டிருந்தார். கோவை கொடிசியா பகுதியில் சென்று கொண்டிருந்த போது தனியார் பள்ளி அருகே அமைக்கப்பட்டிருந்த வேகத்தடையில் தடுமாறி கீழே விழுந்து சந்திரகாந்த் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அந்த வேகத்தடை திடீரென புதிதாக அமைக்கப்பட்டிருந்தது தெரியாமல் வழக்கம் போல் வேகமாக வந்த சந்திரகாந்த் வேகத்தடையில் தடுமாறி கீழே விழுந்து இறந்திருக்கிறார் என்று அப்பகுதி மக்கள்கூறுகிறார்கள். புதிதாக அமைக்கப்பட்ட வேகத்தடையில் வெள்ளை நிற கோடு போடப்பட்டிருந்தால் அவர் உயிரிழந்திருக்க வாய்ப்பு குறைவு தான் என்று கூறினார்கள்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 05.10.2023

## தடபுடலாக நடந்த தலைவர் 170 பட பூஜை.. படக்குழு வெளியிட்ட புகைப்படம்



நெல்சன் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்த ஜெயிலர் திரைப்படம் மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றது. இந்த படத்தில், ரஜினிகாந்த், தமன்னா, ரம்யா கிருஷ்ணன், சிவராஜ் குமார், சுனில், மோகன் லால் ஆகியோர் நடித்திருந்தனர்.

அனிருத் இசையில் உலகையே இந்த படம் திரும்பிப் பார்க்க வைத்தது. இந்த படத்தில் மொத்த வசூல் மட்டும் 650 கோடி இருக்கும் என்று சொல்லப்படுகிறது

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்: ஜெயிலர் படத்தின் மகத்தான வெற்றியைத் தொடர்ந்து ரஜினிகாந்த் ஜெய்பீம் பட இயக்குநர் த.செ.ஞானவேல் இயக்கத்தில் உருவாக உள்ள தலைவர் 170 வது படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் ஆரம்பக்கட்ட பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுவரும் நிலையில், படத்தில் நடிக்கும் நடிகர்களின் பட்டியலை படக்குழு வெளியிட்டு வருகிறது.


அதன்படி, மஞ்சுவாரியர், ரித்திகா சிங், துஷாரா விஜயன், ராணா டகுபதி, பகத் பாசில் ஆகியோர் நடிக்கவுள்ளதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பை படக்குழு நேற்று வெளியிட்டது. மேலும், மல்டி ஸ்டாரர் படமாக உருவாகவுள்ள இப்படத்தில் அமிதாப் பச்சன் நடிக்க உள்ளதாக பேசப்படுகிறது இது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தலைவர் 170 படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக விமான மூலம் கேரளா சென்ற சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது, ஜெயிலர் படம் எதிர்பார்க்காததை விட பெரிய வெற்றி பெற்றுள்ளது. எனது 170 வது படத்தை த.செ. ஞானவேல் இயக்குகிறார். இந்தபடம் நல்ல கருத்துள்ள பிரம்மாண்டமான பொழுதுபோக்குபடமாக இருக்கும் என்றார்.

இந்நிலையில் தலைவர் 170 திரைப்படத்தின் பூஜை திருவனந்தபுரத்தில் தடபுடலாக நடைபெற்றது. இதில் சூப்பர்ஸ்டார்ரஜினிகாந்த் குத்துவிளக்கு ஏற்றிவைத்தார். இந்த பூஜையில் ரஜினிகாந்த், ஞானவேல் ராஜா, மஞ்சுவாரியர், ஜிஎம் மோகன், விஜய் டிவி ரக்ஷன் மற்றும் பல தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.



## டைட்டன் நீர்மூழ்கி கப்பல் விபத்து படமாகிறது



வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலின் ஆழத்தில், திடீரென்று பனிப்பாறையில் மோதி நீரில் மூழ்கிய டைட்டானிக் கப்பலின் இடிபாடுகளைப் பார்க்க, 'டைட்டன்' என்ற ஆழ்கடல் நீர்மூழ்கி சுற்றுலா வாகனம், கடந்த ஜூன் மாதம் சென்றது. இதில் 5 பேர் பயணம் செய்தனர். புறப்பட்ட சில மணி நேரங்களிலேயே அதன் தொடர்பு துண்டிக்கப்பட்டது. பேரழுத்தம் காரணமாக நீர்மூழ்கி சுற்றுலா வாகனம் உடைந்ததில், அதில் பயணம் செய்த 5 பேரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்த விபத்தை அடிப்படையாக வைத்து திரைப்படம் உருவாகும் என்றும், இதை ஜேம்ஸ் கேமரூன் இயக்குவார் என்றும் தகவல்கள் வெளியானது. ஆனால், இத்தகவலை ஜேம்ஸ் கேமரூன் திட்டவட்டமாக மறுத்தார்.

இந்நிலையில், இச்சம்பவத்தை மைண்ட்ரியாட் என்டர்டெயின்மென்ட் திரைப்படமாக உருவாக்க இருப்பதாக கூறியுள்ளது. 'சால்வேஜ்ட்' என்று பெயர் சூட்டப்பட்ட இதை, 'தி பிளாக்கெனிங்' என்ற படத்தை தயாரித்த பிரையன் டாபின்ஸ் இணைந்து தயாரிக்கிறார். ஜஸ்டின் மேக்ரிகோர், ஜோனதன் கீசே இணைந்து திரைக்கதை எழுதுகின்றனர். இப்படத்தின் இயக்குனர் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகிறது.

## சிவராஜ் குமாரின் கோஸ்ட் பட டிரைலர்: ராஜமவுலி, தனுஷ் வெளியிட்டனர்



கன்னட சூப்பர் ஸ்டார் சிவராஜ் குமார், தற்போது தென்னிந்திய மொழிகளில் நடிக்க அதிக ஆர்வம் காட்டுகிறார். ஏற்கனவே ரஜினிகாந்துடன் இணைந்து 'ஜெயிலர்'படத்தில்நடித்திருந்த அவர், இப்போது தனுஷுடன் இணைந்து 'கேப்டன் மில்லர்' படத்தில்நடித்துமுடித்துள்ளார். இதையடுத்து சிவராஜ் குமார் நடித்துள்ள பான் இந்தியா படம், 'கோஸ்ட்'. ஆக்ஷன் திரில்லர் ஜானரில் உருவாகியுள்ள இப்படத்தை கதை எழுதி ஸ்ரீனி இயக்கியுள்ளார்.

சந்தோஷ் புரொடக்ஷன்ஸ் சார்பில் சந்தோஷ் நாகராஜ் வழங்க, சந்தேஷ்.என் தயாரித்துள்ளார். இது அவர் தயாரித்துள்ள 31வது படமாகும். தசரா பண்டிகையையொட்டி வரும் 19ம் தேதி கன்னடம், தெலுங்கு, இந்தி, தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் திரைக்கு வரும் இப்படத்துக்காக, தமிழ்ப் பதிப்புக்கு சிவராஜ் குமார் டப்பிங் பேசியுள்ளார்.

'கோஸ்ட்' படத்துக்கான டிரைலரின் தெலுங்கு பதிப்பை இயக்குனர் எஸ்.எஸ். ராஜமவுலியும், தமிழ்ப் பதிப்பை தனுஷும் தங்கள் சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டு படக்குழுவினரை வாழ்த்தியுள்ளனர். பாலிவுட் விநியோகஸ்தர் ஜெயந்திலால் கடா, பென் மூவிஸ் சார்பில் இப்படத்தை தியேட்டர்களில் வெளியிடும் உரிமையை வாங்கியுள்ளார். மஸ்தி, பிரசன்னா வி.எம் இணைந்து வசனம் எழுதியுள்ளனர். அர்ஜூன் ஜென்யா இசை அமைக்க, மகேந்திர சிம்ஹா ஒளிப்பதிவு செய்துள்ளார்.

சிவராஜ் குமார், அனுபம் கெர், ஜெயராம், பிரசாந்த் நாராயணன், அர்சனா ஜோயிஸ், சத்யபிரகாஷ், தட்டன்னா உள்பட பலர் நடித்துள்ளனர்.



## விஜய் சேதுபதி கேத்ரினா பட ரிலீசில் மாற்றம்

விஜய் சேதுபதி மற்றும் பிரபல பாலிவுட் நடிகை கேத்ரினா கைஃப் நடிப்பில் உருவாகி வந்த படம் 'மெர்ரி கிறிஸ்துமஸ்'. இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து தற்போது இறுதி கட்ட தொழில்நுட்ப பணிகள் நடைபெற்று வருகின்றன. இயக்குனர் ராம் ராகவன் இயக்கத்தில் உருவான இந்த படம் கிறிஸ்துமஸ் விருந்தாக டிசம்பர் 23ம் தேதி வெளியாகும் என படக்குழுவினர் அறிவித்திருந்தனர். ஆனால் தற்போது கிறிஸ்துமஸ் தினத்தில் ஷாருக்கானின் 'டன்கி' மற்றும் பிரபாஸின் 'சலார்' ஆகிய இரண்டு பெரிய படங்கள் ரிலீஸ் ஆவதால் 'மெர்ரி கிறிஸ்மஸ்' திரைப்படத்தின் ரிலீஸ் தேதி மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இந்த படம் இரண்டு வாரங்களுக்கு முன்பு அதாவது டிசம்பர் 8ம் தேதியே வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விஜய் சேதுபதி பாலிவுட்டில் ஹீரோவாக நடித்த முதல் படம் என்பதால் இந்த படத்திற்கு எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.



## உலககோப்பை இன்று தொடக்கம்.. 1996 WC ரீப்பிட்டா இது? முதல் போட்டியில் இங்கிலாந்து, நியூசிலாந்து மோதல்

ஐசிசி உலக கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று முதல் அஹமதாபாத்தில் பிரம்மாண்டமாக நடைபெறுகிறது. முதல் போட்டியில் கடந்த முறை பைனல் வரை வந்த இங்கிலாந்து நியூசிலாந்து அணிகள் இன்று பல பரிட்சை நடத்துகிறது.

இந்த போட்டி மதியம் 2 மணிக்கு தொடங்குகிறது. இந்த போட்டியை காண 40 ஆயிரம் பெண்களுக்கு இலவச டிக்கெட்கள் வழங்கப்பட்டு இருக்கிறது. உலகக்கோப்பை தொடர் நடைபெற உள்ள நிலையில் தொடக்க விழா ஏதும் நடத்தப்படாதது ரசிகர்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.




இருப்பினும் உலகக்கோப்பை தொடரில் முதல் ஆட்டத்தில் இருந்து அதிரடி சரவெடிகள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அகமதாபாத் மைதானம் ரன் குவிப்புக்கு ஏற்ற ஆடுகளம் ஆகும். மேலும் சுழற் பந்துவீச்சு வேகப்பந்து வீச்சு என இரண்டுமே சரிசம அளவில் இருக்கும். பேட்ஸ்மேன் மற்றும் பவுலர்கள் இருவருமே தங்களுடைய திறமையை பயன்படுத்தினால் நிச்சயம் இங்கு சாதிக்க முடியும்.

இருப்பினும் இன்றைய ஆட்டத்தில் இங்கிலாந்து அணியில் பென் ஸ்டோக்ஸ் களமிறங்குவது சந்தேகமாக இருக்கிறது. இதேபோன்று நியூசிலாந்து அணியில் கேப்டன் வில்லியம்சன் இன்றைய ஆட்டத்தில் விளையாட மாட்டார் என தெரிகிறது. இரு அணியிலுமே ஸ்டார் வீரர்கள் இல்லாத நிலையில் மற்ற திறமை வாய்ந்த வீரர்கள் இருக்கிறார்கள்.

கடைசியாக இரு அணிகளும் மோதிய நான்கு ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி ஒன்றுக்கு மூன்று என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதனை அடுத்து நியூசிலாந்து அணி வங்கதேசத்துடன் மூன்று ஒரு நாள் போட்டிகளில் மோதி அதில் 2 போட்டிகளில் வெற்றி பெற்றது. மேலும் பயிற்சி ஆட்டத்தில் இரண்டுக்கு பூஜ்ஜியம் என்ற கணக்கில் வென்று இருக்கிறது.

இதனிடையே 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இதே அகமதாபாத்தில் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்தும் நியூசிலாந்தும் முதல் போட்டியில் மோதி இருக்கிறது. இதில் நியூசிலாந்து அணி 11 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தற்போது 96 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை போல் மீண்டும் அதே மாதிரி தொடங்குவதால் ரசிகர்கள் மத்தியில் ஆச்சரியம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த உலகக் கோப்பையில் இந்தியா அரை இறுதியில் இலங்கையிடம் தோல்வியை தழுவியது குறிப்பிடத்தக்கது.

## சண்டை செய்ய தயாராக இருப்பார்.. அவரை ரசிகர்கள் தப்பா புரிஞ்சுக்கிட்டாங்க.. அஸ்வினின் குட்டி ஸ்டோரி!



உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் நாளை தொடங்கவுள்ளது. அகமதாபாத் மைதானத்தில் நடக்கவுள்ள முதல் போட்டியில் நடப்பு சாம்பியனான இங்கிலாந்து அணியை எதிர்த்து நியூசிலாந்து அணி களமிறங்கவுள்ளது. அதேபோல் உலகக்கோப்பை தொடருக்கான பயிற்சிகளையும் அனைத்து அணிகளும் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். அதேபோல் டிக்கெட் விற்பனையும் சூடுபிடித்துள்ள நிலையில், ரசிகர்களிடையே உலகக்கோப்பை ஃபீவர் அதிகமாகி வருகிறது. இந்த நிலையில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் உலகக்கோப்பை தொடர்பாக குட்டி ஸ்டோரிகளையும், யாருக்கும் தெரியாத தகவல்களையும் பிரபல வர்ணனையாளர் ஹர்ஷா போக்ளேவுடன் இணைந்து பேசி வீடியோவாக வெளியிட்டு வருகிறார். அந்த வகையில் குட்டி ஸ்டோரி வீடியோவின் 5வது பாகம் இன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் 2011ல் உலகக்கோப்பை வென்ற இந்திய அணி குறித்து அஸ்வின் மற்றும் ஹர்ஷா போக்ளே இருவரும் பேசி இருக்கிறார்கள். அதில் ஹர்ஷா போக்ளே பேசுகையில், இந்தியாவில் கவுதம் கம்பீர் அளவிற்கு வேறு எந்த கிரிக்கெட் வீரரையும் ரசிகர்கள் தவறாக புரிந்து கொண்டதை பார்த்ததே இல்லை. ஏனென்றால் இந்திய அணியின் மிகச்சிறந்த வீரர் கவுதம் கம்பீர். அணிக்காக எந்த எல்லைக்கும் சென்று போராட தயாராக இருப்பார்.

இந்திய அணிக்காக களத்திலும் சரி, எதிரணி வீரர்களுடனும் சரி.. எந்த நிலையிலும் போராடவும், சண்டை செய்யவும் தயாராக இருக்கக் கூடிய வீரர் தான் கவுதம் கம்பீர். எப்போதும் கவுதம் கம்பீர் முகத்தில் உணர்ச்சியை பார்க்க முடியாது. ஆனால் முகத்திற்கு நேராக வந்து விமர்சனங்களை கூறுவார். 2011ஆம் ஆண்டு இறுதிப்போட்டியை போல் கவுதம் கம்பீர் ஏராளமான இன்னிங்ஸ்களை இந்திய அணிக்காக விளையாடி இருக்கிறார்.

நியூசிலாந்து மண்ணில் கவுதம் கம்பீர் ஆடிய ஆட்டத்தை யாராலும் மறக்க முடியாது. ஆஸ்திரேலியாவுக்கு எதிராகவும் சிறப்பாக விளையாடக் கூடிய பேட்ஸ்மேன். இன்னும் சொல்லப் போனால் முக்கியமான போட்டிகளில் அழுத்தம் நிறைந்த போட்டிகளில் விளையாடக் கூடிய பேட்ஸ்மேன் கவுதம் கம்பீர். 2011 உலககோப்பை இறுதிப்போட்டியில் சேவாக் மற்றும் சச்சின் இருவரும் தொடக்க ஓவர்களில் ஆட்டமிழந்த போது கூட இந்திய அணி அழுத்தத்தில் இல்லாமல் பார்த்து கொண்டவர். ஏன், விராட் கோலி ஆட்டமிழந்த போது கூட கவுதம் கம்பீர் அழுத்தத்தை வெளிக்காட்ட கொள்ளவில்லை. அவர் நினைத்திருந்தால் இறுதிப்போட்டியில் சதம் மட்டும் அல்லாமல் 120 முதல் 130 ரன்களை விளாசி இருக்க முடியும். ஆனால் சொந்த சாதனைகளுக்காக அல்லாமல் இந்திய அணிக்காக விளையாடி ஆட்டமிழந்தார் என்று பாராட்டியுள்ளார். இந்த வீடியோ ரசிகர்களிடையே அதிகமாக பகிரப்பட்டு வருகிறது.

## ஆசிய போட்டியில் வரலாற்று சாதனை.. 72 ஆண்டுகள் இல்லாத அளவிற்கு அதிக பதக்கம் வென்றது இந்தியா




ஆசிய விளையாட்டுப் போட்டியில் இதுவரை இல்லாத அளவிற்கு இந்திய அணி அதிக பதக்கங்களை வென்று சாதனை படைத்திருக்கிறது. 1951 ஆம் ஆண்டு முதல் இந்திய அணி ஆசிய விளையாட்டு போட்டிகளில் விளையாடி வருகிறது. இதில் இந்திய அணி அதிகபட்சமாக 2018 ஆம் ஆண்டு ஜக்கார்ட்டாவில் நடைபெற்ற ஆசிய போட்டியில் 70 பதக்கங்களை வென்று இருந்தது. இந்த நிலையில் சீனாவில் நடைபெற்று வரும் இந்த ஒலிம்பிக்கில் இந்த ரெக்கார்டை இந்தியா முறியடித்திருக்கிறது.

இதுவரை இல்லாத வகையில் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய அணி 81 பதக்கங்களை வென்று சாதனை படைத்திருக்கிறது. அதேபோல் இந்திய அணி இதுவரை இல்லாத அளவில் ஒரே சீசனில் 18 தங்கம் வென்று அசத்தியிருக்கிறது. இன்று ஒரு நாள் மட்டும் இந்திய அணி 12 பதக்கங்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. ஆசிய விளையாட்டுப் போட்டியின் 11 வது நாளில் ஈட்டி எறிதல் பிரிவில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார். இதேபோன்று கிஷோர் குமார் வெள்ளிப் பதக்கத்தை தட்டி சென்றார். இதேபோன்று ஆடவருக்கான 4★400 மீட்டர் ரிலே போட்டியில் இந்திய ஆடவர் அணி வெள்ளி பதக்கத்தை கைப்பற்றியது இதேபோன்று மகளிருக்கான 4★400 மீட்டர் ரிலே போட்டியில் இந்திய மகளிர் அணி வெள்ளிப் பதக்கத்தை தட்டி சென்றது. இதே போன்று ஆடவருக்கான ஐந்தாயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்திய வீரர் அவினாஷ் சாபேல் வெள்ளி பதக்கத்தை கைப்பற்றினார்.

இதேபோன்று மகளிருக்கான 800 மீட்டர் ஓட்ட பந்தயத்தில் இந்திய வீராங்கனை ஹார்மிலான் வெள்ளி பதக்கத்தை தட்டிச் சென்றார். 21 ஆண்டுகளுக்கு முன்பு இதே பிரிவில் ஹார்மிலான்தாய் மாதுரி சிங், வெள்ளிப் பதக்கத்தை வென்றது குறிப்பிடத்தக்கது. இதுபோன்று 35 கிலோமீட்டர் பந்தயத்தில் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய அணி வெண்கல பதக்கத்தை தட்டி சென்றது. இதேபோன்று வில்வித்தை காம்பவுண்ட் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜோதி மற்றும் ரோஜா தங்கப் பதக்கத்தை தட்டி சென்றது.

இதேபோன்று ஸ்குவாஷ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய ஜோடி வெண்கல பதக்கத்தை வென்றது. ஆடவர் ஒற்றையர் பிரிவில் சவுரவ் கோஷல் இறுதிச்சுற்றுக்கு முன்னேறி பதக்கத்தை உறுதி செய்திருக்கிறார். குத்துச்சண்டைக்கான மகளிர் 75 கிலோ எடைப்பருவில் இந்தியாவின் லவ்லீனா தோல்வியை தழுவியதன் மூலம் வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. இதேபோன்று மற்றொரு வீராங்கனையான பர்வீன் ஹூடா வெண்கல பதக்கமும், மல்யுத்தம் போட்டியில் சுனில் குமார் வெண்கல பதக்கமும் வென்றனர். ஹாக்கியில் இந்திய அணி தென்கொரியாவை 5க்கு 3 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறி இருக்கிறது. இதைப் போன்று கபடி போட்டியில் இந்திய ஆடவர் அணியும் மகளிர் அணியும் அரை இறுதிக்கு சென்று இருக்கிறார்கள். பதக்கப் பட்டியலில் இந்தியா 81 பதக்கங்களுடன் தொடர்ந்து நான்காம் இடத்தில் இருக்கிறது. முதல் இடத்தில் 316 பதக்கங்களுடன் சீனாவும், ஜப்பான் 147 பதக்கத்துடனும் இரண்டாவது இடத்திலும், தென்கொரியா 148 பதக்கத்துடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.